THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Government have so far sanctioned a loan of Rs. 42·94 lakhs and a grant of Rs. 18·76 lakhs to the Corporation of Madras for the scheme. Out of this grant and loan, works to the extent of Rs. 46·64 lakhs have been executed up to March 1967.

THIRU K. VINAYAKAM : While I differ from the statement of Dr. Hande that Kodambakkam is considered to be the Cindrella of Madras whereas it is considered to be the Hollywood of Madras the Corporation spend money, lay a road and black-top it, the next day another department of the same Corporation breaks up the road for some other purpose and relays it and as this is duplication of work and involves expenditure, will the Government issue instruction to their own party in power in the Corporation to have coordination in their work?

THE HON. THIRU C. N. ANNADURAI : That has been the proposal put forward by the Corporation for the past so many years. The Government at that time was not considerate or was unsympathetic. This Government proposes to act in a different manner.

மேலவையில் ஆசிரியர் பிரதிநிதி

*** 346 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மேலவையில் ஆசிரியர் தொகுதிக்குப் பிரதிநிதியை தேர்ந்தெடுக்க தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கும் வகையில் மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

போலீஸ் இன்ஸ்பெக்டர்கள்.

*** 347 வினா—திரு, கொ. இர. ஞனசம்பந்தன் :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்டகேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றனர் ?

(இ) இவர்கள் எல்லோருக்கும் இலவச வீடோ அல்லது வீட்டு வாடகைக்கு அலவன்ஸோ கொடுக்கப்படுகிறதா ?

(உ) இல்லையென்றால் அது கொடுக்கப்பட சர்க்கார் உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) 361.

(இ) & (உ) 144 போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அரசினர் உறைவிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 217 இன்ஸ்பெக்டர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்பட்டுள்ளது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, உறைவிடம் கொடுக்கப்பட்டுள்ளவர்களிடத்தில் கூட வாடகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதாகத் தெரிகிறது. ஆகவே, அம்மாதிரி வாடகை வசூலிக்கக்கூடாது எனறு தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

1967 ஜூலை 15]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு வாடகை வீடுகள் கொடுக்கப்பட்டால், அவர்கள் சம்பளத்திலிருந்து இன்ன சதவிகிதம் என்று சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோரிடமிருந்து வசூல் செய்வதுபோல—அவர்களிட மிருந்தும் வசூல் செய்கிறுர்கள்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்

* 365 வினு —**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரையில் எந்தெந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(இ) அதற்கான காரணம் ? யார் யார் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1960 முதல் 1966 வரை மல்லசமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஒருவர் மீது மட்டுமே 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டம், 151-வது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

(இ) சட்டத்தின்படி பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்ற முறையில் தமக்குள்ள கடமைகளை அவர் சரிவர நிறைவேற்றத் தவறியமையினுல் தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களில் எத்தனை பேர் மீது கம்ப்ளெய்ண்ட் வந்திருக்கிறது ? இன்னும் எத்தனை கம்ப்ளெயின்ட்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றி விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தரப்படும்.

நகரவை உறுப்பினர்கள்

* 366 **வினு—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964 டிசம்பரில் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்ட இடதுசாரி கம்யூனிஸ்டுகளில் எத்தனை பேர்கள் நகரசபை அங்கத்தினர்கள் ?

(இ) விடுதலை அடைந்தவுடனே எத்தனை பேர்கள் கவுன்ஸில் பதவியிலிருக்க அனுமதிக்கப்பட்டார்கள் ?

(உ) எத்தனை பேர்கள் அனுமதிக்கப்படவில்லை, காரணம் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் 1964-ம் ஆண்டு டிசம்பரில் காவலில் வைக்கப்பட்டனர்.

(இ) விடுதலை அடைந்தவுடனே இவர்களில் 6 உறுப்பினர்கள் மீண்டும் உறுப்பினர்களாக்கப்பட்டனர்.

(உ) குடியாத்தம் நகராட்சி மன்ற உறுப்பினராகிய திரு வி. கே. கோதண்டராமன் அவர்கள் (தற்போதைய சட்டசபை உறுப்பினர்) மறுபடியும் உறுப்பினராவதை நகராட்சி மன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் எதிர்த்ததால், நகராட்சி மன்றம் அவரை மறுபடியும் உறுப்பினராக எடுத்துக்கொள்ளவில்லை. நகராட்சி ஆணையர் இவ் வழக்கை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பினுர். மாவட்ட நீதிபதியும் இத் தகுதியின்மையை உறுதி செய்தார்.